# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
## Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | கணக்கீடு – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) கணக்கீட்டின் நம்பகத்தன்மை (Accounting reliability) பின்வருவனவற்றுள் எவற்றுடன் நேரடித்தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது?

A. உண்மையான தகவல்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
B. நடுநிலையான தன்மை.
C. வெளிப்படையாக இருத்தல்.
D. முன்னெச்சரிக்கையாக இருத்தல்.

இவற்றுள் சரியானது எது?

(1) ABD (2) ABCD (3) ABC (4) ABCDE (5) ACDE (..........)

02) இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின்படி பின்வருவனவற்றுள் எது நிதித் தகவல்களின் மேம்படுத்தும் பண்புசார் குணாதிசயங்களில் ஒன்று அல்ல?

(1) விளங்கக்கூடிய தன்மை
(2) நம்பகத்தன்மை
(3) தொடர்பான தன்மை
(4) காலம் தவறாமை
(5) உண்மையான பிரதிநிதித்துவம் (..........)

03) நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பில் பாரிய செல்வாக்கினைச் செலுத்தவதும் LKAS - 01 லும் அடிப்படை எண்ணக்கருவாகக் கருதப்படுவது எது?

(1) அட்டுறு எண்ணக்கரு
(2) பாதுகாப்பு எண்ணக்கரு
(3) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
(4) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
(5) அலகுசார் எண்ணக்கரு (..........)

04) நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்தி பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும் கட்சியினருக்குப் பாதுகாப்பினை வழங்கும் எண்ணக்கரு எது?

(1) முன்னெச்சரிக்கை
(2) அட்டுறு
(3) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியம்
(4) பண அளவீடு
(5) கணக்கீட்டுக் காலம் (..........)

05) X வணிக நிறுவனம் ஒன்றில் 2016 மார்ச் 31 இல் காணப்பட்ட மொத்தச் சொத்துக்கள் ரூபா 540000. மொத்த வெளியார் பொறுப்புக்கள் ரூபா 240000 ஆகும். ஏப்ரல் மாத முதல் கிழமையில் பின்வரும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றன.

- வணிக உரிமையாளர் ரூபா 40000 கடன்கொடுத்தோர் தொகையினை முழுமையாகத் தீர்ப்பதற்காக தனது சொந்த நிதியில் ரூபா 30000 செலுத்தப்பட்டது.
- 2015ல் அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டு இருந்தது ரூபா 8000 ஏப்ரல் 5 இல் மீளப்பெறப்பட்டது.
- கடன்கொடுத்தோருக்குக் கொடுக்கவேண்டிய ரூபா 40000 கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 30000 ஈடாக்கப்பட்டதுடன் மீதித் தொகைக்குக் காசோலை வரையப்பட்டுத் தீர்க்கப்பட்டது.

மேற்தரப்பட்ட கொடுக்கல்வாங்கல் நிகழ்வின் பின்னர் உரிமையாண்மை மீதி யாது?

*(1)* ரூபா 48000 *(2)* ரூபா 348000 *(3)* ரூபா 358000
*(4)* ரூபா 300000 *(5)* ரூபா 340000 (..........)

06) 30.06.2016ல் கண்ணன் நிறுவனத்தின் பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கில் பதியப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

- கொடுத்தகழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 6000 பெற்றகழிவுக் கணக்கின் வரவுப்பக்கத்தில் பதியப்பட்டது.
- கொடுத்தவட்டி ரூபா 5000 பெற்றவட்டியெனக் கருதிப் பதியப்பட்டது.
- வாடகைக்குக் கொடுத்த காசு ரூபா 3000 வாடகைக் கணக்கில் ரூபா 2000 எனப் பதியப்பட்டது.

தொங்கல் கணக்கு உருவான தொகை யாது?

*(1)* ரூபா 23000 *(2)* ரூபா 10000 *(3)* ரூபா 1000
*(4)* ரூபா 12000 *(5)* ரூபா 6000 (..........)

07) பின்வரும் தகவல்கள் வரையறுத்த செந்தில் கம்பனியுடன் தொடர்புடையது.

| | ரூபா<br>**31.03.2016** | ரூபா<br>**31.03.2015** |
|---|---|---|
| முற்பணமாகச் செலுத்தப்பட்ட வாடகை | – | 70000 |
| செலுத்தவேண்டிய காகிதாதி செலவு | 50000 | 90000 |

- கம்பனியானது 01.04.2014 இல் கட்டடமொன்றை ரூபா 40000 மாதாந்த வாடகைக்கு எடுத்துள்ளது.
- 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கு செலுத்திய வாடகை, காகிதாதிகள் செலவுகள் முறையே ரூபா 520000, ரூபா 460000 ஆகும்.

கம்பனியின் 31.03.2016ல் உள்ளவாறான முற்பணவாடகை மற்றும் 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கான காகிதாதிகள் செலவு

| | **முற்பணவாடகை (ரூபா)** | **பழுதுபார்த்தல் செலவு (ரூபா)** |
|---|---|---|
| *(1)* | 30000 | 420000 |
| *(2)* | 110000 | 420000 |
| *(3)* | 110000 | 520000 |
| *(4)* | 90000 | 500000 |
| *(5)* | 90000 | 420000 |

(..........)

08) கோபி வணிகத்தின் 31.12.2015ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியும், கடன்பட்டோர் பட்டியல் மீதியும் வேறுபட்டமையினால் அறியப்பட்ட வழு பின்வருமாறு.

விற்பனைப் பட்டியல் ரூபா 22500 உட்திரும்பல் நாளேட்டில் ரூபா 2500 எனப் பதியப்பட்டதுடன் குறித்த நபர் கணக்கில் ரூபா 12500 என வரவில் பதியப்பட்டது.

மேலே செய்யப்பட்ட வழுவினால் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை விட கடன்பட்டோர் பட்டியல் மீதி எவ்வளவு தொகையால் அதிகமாக அல்லது குறைவாக இருக்கும்?

(1) ரூபா 12500 அதிகம்.

(2) ரூபா 10000 குறைவு

(3) ரூபா 15000 அதிகம்.

(4) ரூபா 10000 அதிகம்.

(5) ரூபா 2500 குறைவு (..........)

09) ஆதனம் பொறி தொடர்பான விபரங்களும் ஏற்பட்ட கிரயங்களும் வருமாறு.

| | ரூபா **"000"** |
|---|---|
| ஆதனம் பொறியின் பட்டியல் விலை | 260000 |
| வியாபாரக் கழிவு பட்டியல் விலையில் | 10% |
| கையாளும் கிரயங்கள் | 10000 |
| நிறுவுதற் கிரயம் | 20000 |
| பரிசோதனைச் செலவு | 16000 |
| பொறியியலாளர் கட்டணம் | 25000 |
| பராமரிப்புச் செலவு | 2000 |
| காப்புறுதிச் செலவு | 12000 |

ஆதனம் பொறி உபகரணத்தின் கிரயம் எனப்படுவது யாது?

(1) ரூபா 331000 (2) ரூபா 315000 (3) ரூபா 290000

(4) ரூபா 305000 (5) ரூபா 331000 (..........)

10) *31 மார்ச் மாதம் தொடர்பான கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்.*

| கடன் பட்டோர் பெயர் | 2016.03.01 மீதி வரவு / (செலவு) | விற்பனைகள் | விற்பனைத் திரும்பல் | அறவிடமுடியா கடன் | பெற்ற காசு | 31.03.2016 மீதி |
|---|---|---|---|---|---|---|
| வரதன் | 12000 | 60000 | – | 2000 | ? | – |
| நிமால் | (5000) | 40000 | 3000 | – | 30000 | ? |
| சங்கர் | 10000 | 30000 | – | – | 26000 | 14000 |
| பாபு | 25000 | 70000 | 2500 | – | 60000 | 32500 |

மேலே தரப்பட்ட அட்டவணையின்படி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் காட்டப்படவேண்டிய காசுப் பெறுவனவும் 31.03.2016ல் உள்ளபடி இறுதி மீதியும் முறையே

(1) ரூபா 186000, ரூபா 48500

(2) ரூபா 190000, ரூபா 48000

(3) ரூபா 190000, ரூபா 58500

(4) ரூபா 186000, ரூபா 58500

(5) ரூபா 1106000, ரூபா 58500 (..........)

11) பின்வருவனவற்றுள் எதை / எவற்றை LKAS 2 (சரக்கிருப்பு) இன் வரைவிலக்கணப்படி இருப்புக்களின் கிரயம் என வகைப்படுத்த முடியும்?

A : கொள்வனவுக் கிரயம் (Cost of Purchase)

B : நிலைமாற்றுக்கிரயம் (Cost of conversion)

C : ஏனைய கிரயங்கள் (Other cost)

*(1)* A மாத்திரம் *(2)* A, B மாத்திரம் *(3)* A, C மாத்திரம்

*(4)* B, C மாத்திரம் *(5)* A, B, C ஆகிய எல்லாம் (..........)

12) கீழே தரப்பட்ட நடவடிக்கைகள் வரையறுத்த பூமிகா பொதுக்கம்பனியின் தளபாடம் தொடர்பான விபரங்கள்

| விபரம் | ரூபா "000" |
|---|---|
| 01.04.2015ல் உள்ளவாறான முன்கொண்டு செல்லப்பட்ட தொகை | 7500 |
| 01.01.2016ல் அகற்றப்பட்ட தளபாடம் மீதான நட்டம் | 240 |
| 01.10.2015ல் பெறப்பட்ட புதிய தளபாடம் | 6000 |

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட தளபாடம் 01.04.2010ல் கொள்வனவு செய்யப்பட்டதாகும். இவ்வருடத்தில் அகற்றப்பட்ட தளபாடம் ரூபா 5000000, தளபாடம் நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கான தளபாடத்துக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அகற்றப்பட்ட தளபாடம் தொடர்பாக விற்பனையில் இருந்து பெற்ற தொகையும் பின்வருவனவற்றுள் எவை?

| | பெறுமானத்தேய்வு (ரூபா '000') | விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை (ரூபா '000') |
|---|---|---|
| *(1)* | 850 | 1885 |
| *(2)* | 1375 | 2385 |
| *(3)* | 1675 | 2760 |
| *(4)* | 1675 | 1885 |
| *(5)* | 550 | 2385 |

(..........)

❖ ***13ஆம் 14ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்துக.***
*பின்வரும் தகவல்கள் 'அன்னை' சனசமூக நிலையத்தின் 31.12.2015ல் முடிவடைந்த வருடத்தில் பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டவையாகும்.*

| விபரம் | | தொகை ரூபா |
|---|---|---|
| பெற்ற சந்தா | 31.12.2014 | 5000 |
| | 31.12.2015 | 65000 |
| | 31.12.2016 | 6000 |
| நன்கொடை | (01.01.2014 இல் பெற்றது) | 45000 |
| வட்டி வருமானம் | | 5000 |
| மொத்தச் செலவு | | 30000 |

**மேலதிக தகவல்கள்**

*01.* 31.12.2015ல் பெறவேண்டிய சந்தா தொடர்பான விபரங்கள்

31.12.2014ற்கு ரூபா 8000

31.12.2015ற்கு ரூபா 12000

*02.* நன்கொடை பெற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 10 வருடங்களுக்கு வருமானமாகக் காட்டப்பட்ட பின்னரான மீதியை காட்டுகின்றது.

13) 31.12.2015ல் முடிவடைந்த ஆண்டிற்கான சந்தா தொகை யாது?

(1) ரூபா 80000 (2) ரூபா 70000 (3) ரூபா 77000

(4) ரூபா 85000 (5) ரூபா 90000 (..........)

14) 31.12.2015ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மிகை யாது?

(1) ரூபா 57000 (2) ரூபா 76000 (3) ரூபா 76500

(4) ரூபா 55500 (5) ரூபா 74500 (..........)

15) பங்குடமை தொடர்பில் மிகச்சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) பங்குடமையின் உரிமையாண்மை மீதியானது மூலதன தொகையினையும் அவர்களுக்கு உரித்தான ஒதுக்கத்தினையும் மட்டும் காட்டுகின்றது.

(2) பங்குடமை ஒப்பந்தமின்றிச் செயற்பட முடியாது.

(3) 1890 பங்குடமைக் கட்டளைச் சட்டத்தில் 24ஆவது விதியின்படி பங்காளர் மூலதனத்திற்கு குறைந்தது 5% வட்டி வழங்கப்பட வேண்டும்.

(4) ஒப்பந்தம் இல்லாத பங்குடமைகள் தமது இலாபத்தினை அவர்கள் மூலதன விகிதப்படி பொறுப்பேற்க வேண்டும்.

(5) பங்காளர்கள் வருட ஆரம்பத்தில் அல்லது வருட இறுதியில் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். (..........)

16) பெறுமதிசேர் வரி (VAT) பதிவினைக் கொண்டிராத வரையறுத்த பொதுக்கம்பனியானது 01.04.2015ல் மோட்டார் வாகனம் ஒன்றினை ரூபா 5760000 இற்கு வாங்கியது. இத்தொகையில் VAT இற்காக செலுத்திய ரூபா 760000 உள்ளடங்கியது. இம்மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயட்காலம் 10 ஆண்டுகளாகும். இதற்கு எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லை. LKAS 16 இன்படி 31.03.2016ல் உள்ளவாறான மோட்டார் வாகனத்தின் கொண்டுசெல்லல் தொகை யாது?

(1) ரூபா 4500000 (2) ரூபா 576000 (3) ரூபா 5184000

(4) ரூபா 5000000 (5) ரூபா 5260000 (..........)

❖ ***17, 18 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் இருப்பு தொடர்பான தகவல்களைப் பயன்படுத்துக.***

| திகதி | விபரங்கள் | அலகுகள் | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 01.01.2016 | மீதி | 8000 | 80000 |
| 06.01.2016 | கொள்னவு | 12000 | 240000 |
| 15.01.2016 | கொள்னவு | 10000 | 280000 |

- ஜனவரி 16ம் திகதி தொடக்கம் 31ம் திகதி வரை 28000 அலகுகள் ரூபா 30 விலையில் விற்பனை செய்தது.

17) சரக்கிருப்பு வழங்கலின் போது முதல் வந்தது முதல் வெளியே (FIFO) முறையினைப் பயன்படுத்தி 31.01.2016 இற்கான மொத்த இலாபம் யாது?

(1) ரூபா 560000 (2) ரூபா 240000 (3) ரூபா 296000

(4) ரூபா 544000 (5) ரூபா 320000 (..........)

18) சரக்கிருப்பு வழங்கலின் போது நிறையிட்ட சராசரி முறையினைப் பயன்படுத்தி இருப்பின் 31.01.2016 இற்கான விற்பனைக்கிரயம் யாது?

(1) ரூபா 784000 (2) ரூபா 812000 (3) ரூபா 600000

(4) ரூபா 520000 (5) ரூபா 560000 (..........)

19) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மொத்த மீதியானது அதன் பேரேட்டு மீதியுடன் எப்பொழுதும் சமப்படும்.

(2) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவுமீதி தோன்றுவதில்லை.

(3) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கடன்கொடுத்தோர் எதிரீடு சாத்தியமில்லை.

(4) உட்திரும்பல் நாளேட்டின் மொத்தத் தொகையானது கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்.

(5) இரத்துச் செய்யப்பட்ட கொடுத்தகழிவு கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவுசெய்யப்பட வேண்டியதில்லை. (..........)

20) அட்டுறு, காலஅளவீடு, தேறல் போன்ற எண்ணக்கருக்கள் மூன்றும் பொருத்தமாக அமையும் பிரதான சந்தர்ப்பம் எது?

(1) அறவிடமுடியாக் கடனும், ஐயக்கடன் ஏற்பாடும் பதிவுசெய்தலில் அவசியம்.

(2) நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள், பொறுப்புக்களின் பெறுமானம் மதிப்பிட்டுக் காட்டுதல்.

(3) கடன் விற்பனைகள், வருமான வருமதிகள் நிதியாண்டின் வருமானமாகக் காட்டுதல்.

(4) உரிமையாளர் மேலதிக மூலதனம் கணக்கேடுகளில் காட்டுதல்.

(5) எல்லா விற்பனைகளும் நாளேட்டில் பதிவுசெய்தல். (..........)

21) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி ஒன்றின் காசுப்பாய்ச்சற் கூற்றின் மூலம் நிதிச்செயற்பாட்டின் கீழான காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்படும் விடயத்தினை மட்டும் கொண்ட தொகுதி எது?

(1) காசுக்கு வாங்கிய மோட்டார், முதலீடுகள், பங்குவழங்கல்

(2) வருமானவரி செலுத்துதல், கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு, கடன்வட்டி செலுத்துதல்

(3) பங்குவழங்கல், நீண்டகாலக் கடன் பெறல், செலுத்திய பங்குலாபம்

(4) இருப்புக்களின் அதிகரிப்பு, கடன்கொடுத்தோர் அதிகரிப்பு

(5) முதலீடுகள் விற்பனை, முதலீட்டு வருமானம், தொகுதிக்கடன் மீட்பு (..........)

22) வரையறுத்த பொதுக்கம்பனி 01.01.2015ல் 90000 பங்குகளை ஒவ்வொன்றும் ரூபா 10 விலையில் வழங்க அனுமதி கிடைத்திருந்தது. இவற்றுள் 40000 பங்குகள் 01.07.2015 வரை வழங்கி பணம் சேகரித்திருந்தது. எஞ்சிய பங்குகள் 01.08.2015ல் வழங்குவதற்கு முன்விபரணத்தினை வெளியிட்டபோது கம்பனிக்கு 20000 விண்ணப்பங்கள் மேலதிகமாகக் கிடைக்கப்பெற்றது. 15.10.2015ல் மேலதிக விண்ணப்பங்களை நிராகரிப்புச் செய்தது. எஞ்சிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 31.12.2015ல் முடிவடைந்த காலத்தின் வங்கிமீதியின் பெறுமதி யாது?

(1) ரூபா 500000

(2) ரூபா 700000

(3) ரூபா 900000

(4) ரூபா 600000

(5) ரூபா 400000 (..........)

23) பங்குடமை ஒன்றினை ஹரி, பானு, சானு ஆகிய பங்காளர்கள் முறையே ரூபா 300000, 200000, 100000 ஆகிய பணத்தொகைகளை ஈடுபடுத்த விரும்பினர். எனினும் இவர்களுக்கிடையே உடன்படிக்கை ஏற்படுத்துவதில் பிணக்குகள் காணப்பட்டமையினால் 24வது சட்டவிதியைப் பின்பற்றினர். இப்பங்குடமையின் தகவல்கள் வருமாறு.

- முயற்சி 01.01.2015ல் ஆரம்பிக்கப்பட்டது.
- பங்காளர் கடன்களுக்கு 5% வட்டி வழங்கப்படும்.
- ஹரி நிர்வாகத்தில் ஈடுபட்டு ரூபா 20000 ஆண்டுச் சம்பளம் பெற விரும்புகின்றார்.
- பானு பங்குடமையின் அபிவிருத்திக்கு ரூபா 5000 செலவு செய்கின்றார்.
- 31.12.2015ல் உழைத்த இலாபம் ரூபா 60000 ஆகும்.
- பங்காளர் பற்றுக்கள்

ஹரி - ரூபா 10000
பானு - ரூபா 15000
சானு - ரூபா 5000

31.12.2015ல் பங்காளர் நடைமுறைக்கணக்கு மீதியாக காட்டப்படும் தொகைகள் யாவை?

| | **ஹரி (ரூபா)** | **பானு (ரூபா)** | **சானு (ரூபா)** |
|---|---|---|---|
| *(1)* | 20000 | 15000 | 15000 |
| *(2)* | 10000 | 10000 | 15000 |
| *(3)* | 40000 | 10000 | 15000 |
| *(4)* | 40000 | 5000 | 20000 |
| *(5)* | 30000 | 15000 | 20000 |

(..........)

❖ ***24, 25, 26 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***
வரையறுத்த சங்கர் பொதுக்கம்பனியின் இரு வருடங்களுக்கான நிதிநிலைமைக்கூற்றில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட உருப்படிகளில் சில பின்வருமாறு.

| | **31.03.2015 (ரூபா 000)** | **31.03.2016 (ரூபா 000)** |
|---|---|---|
| சாதாரணபங்கு மூலதனம் | 6000 | 7400 |
| முன்னுரிமைப்பங்கு மூலதனம் | 4000 | 4000 |
| நிறுத்திவைத்த உழைப்பு | 300 | 650 |
| கடன்கொடுநர் | 400 | 750 |
| வரி ஒதுக்கம் | 600 | 350 |
| அட்டுறு முன்னுரிமைப் பங்குலாபம் | 200 | 350 |

பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றது.

*1)* வருடத்தினுள் செலுத்திய வரி ரூபா 500000
*2)* செலுத்திய சாதாரண பங்குலாபம் ரூபா 300000, முன்னுரிமைப் பங்குலாபம் ரூபா 600000 ஆகும்.
*3)* வணிகம் பயன்படுத்திய மோட்டார் ரூபா 250000 விற்பனை செய்யப்பட்டு அதன்மூலம் ரூபா 60000 இலாபம் கிடைத்துள்ளது.
*4)* வருடாந்த தேய்வின் பெறுமதி ரூபா 175000 ஆகும்.

24) 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்தின் வரிக்கு முன்னரான இலாபமாக அமையும் தொகை யாது?

*(1)* ரூபா 1225 *(2)* ரூபா 1575 *(3)* ரூபா 2025
*(4)* ரூபா 1925 *(5)* ரூபா 2085 (..........)

25) 31.03.2016 இற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சலாக அமைவது

(1) ரூபா 1140 (2) ரூபா 840 (3) ரூபா 1540
(4) ரூபா 1700 (5) ரூபா 1990 (..........)

26) நிதியீட்டப்பட்ட நடவடிக்கையின் தேறிய பெறுமதி யாது?

(1) ரூபா 1400 (2) ரூபா 500 (3) ரூபா 900
(4) ரூபா 1750 (5) ரூபா 850 (..........)

27) வரையறுத்த குமார் பொதுக்கம்பனியின் 2016.03.31ல் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு.

| விபரம் | | வரவு (ரூபா 000) | செலவு (ரூபா 000) |
|---|---|---|---|
| வருமானவரிக் கொடுப்பனவு | 2014/2015 | 290 | |
| | 2015/2016 | 320 | |
| வருமானவரிக்கான ஏற்பாடு | (2014/2015) | | 360 |

**மேலதிக தகவல்கள் :**

31.03.2014/2015ம் வருடத்திற்கான வருமானவரி ரூபா 350000 என இணங்கிக் கொள்ளப்பட்டதுடன் 31.03.2016ம் ஆண்டிற்கு ரூபா 370000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் சரியான பெறுமதிகள் எனக் கருதப்படும் தொகை யாது?

| | **வருமானவரிச் செலவு (ரூபா)** | **வருமானவரிப் பொறுப்பு (ரூபா)** |
|---|---|---|
| (1) | 360000 | 50000 |
| (2) | 310000 | 110000 |
| (3) | 360000 | 100000 |
| (4) | 360000 | 110000 |
| (5) | 290000 | 40000 |

(..........)

❖ ***28, 29, 30 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.***

| **விபரம்** | **(ரூபா 000)** |
|---|---|
| விற்பனைகள் | 2600 |
| விற்பனைக் கிரயம் | 900 |
| செயற்பாட்டுச் செலவு | 500 |
| தளபாட விற்பனை இலாபம் | 120 |
| சாதாரண பங்கிற்கு இடைக்காலப் பங்குலாபம் செலுத்தியது | 140 |
| மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை - அலுவலக உபகரணம் | 160 |
| மீள்மதிப்பீட்டு மிகை - மோட்டார் வாகனம் | 190 |

மேலே தரப்பட்ட நடவடிக்கைகள் 31.03.2016ல் வரையறுத்த அபி பொதுக்கம்பனியினுடைய தாகும். மேலும் இத்தினத்தில் அலுவலக உபகரணம் மீள்மதிப்பீடு செய்வதில் ரூபா 120000 மிகையொன்று ஏற்பட்டுள்ளது. 31.03.2016ல் முடிவடைந்த வருடத்தில் மோட்டார் வாகனம் ஒன்று முதல்தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

28) இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானம், மொத்த செலவுகளின் பெறுமதி யாது?

| | **மொத்த வருமானம் (ரூபா 000)** | **மொத்த செலவு (ரூபா 000)** | |
|---|---|---|---|
| *(1)* | 2010 | 800 | |
| *(2)* | 2910 | 1560 | |
| *(3)* | 2910 | 1700 | |
| *(4)* | 3010 | 1700 | |
| *(5)* | 2720 | 660 | *(..........)* |

29) LKAS 1 (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாவை?

| | **இலாபம் (ரூபா 000)** | **ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூபா 000)** | |
|---|---|---|---|
| *(1)* | 1780 | 70 | |
| *(2)* | 1820 | 310 | |
| *(3)* | 1780 | 310 | |
| *(4)* | 1640 | 70 | |
| *(5)* | 1700 | 30 | *(..........)* |

30) LKAS 1 (நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் மற்றும் நிறுத்தி வைத்த வருவாய் யாது?

| | **மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூபா 000)** | **நிறுத்தி வைத்த வருவாய் (ரூபா 000)** | |
|---|---|---|---|
| *(1)* | 1780 | 260 | |
| *(2)* | 1820 | 500 | |
| *(3)* | 1850 | 1640 | |
| *(4)* | 1610 | 380 | |
| *(5)* | 1850 | (140) | *(..........)* |

❖ ***31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடையினைப் புள்ளிக்கோடுகளில் எழுதுக.***

| **31)** | **செயற்பாடு** | **ஆம் / இல்லை** |
|---|---|---|
| A : | கணக்கீட்டின் முதற்பணியாக அமைவது பதிவு செய்தலாகும். | …………………. |
| B : | இலங்கையில் கணக்கீட்டு நியமங்களைத் தோற்றுவிப்பதிலும் அவற்றினைப் பராமரிப்பதிலும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் காணப்படுகின்றது. | …………………. |
| C : | உரிமையாண்மை, காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களில் மூலங்களாக அமைகின்றன. | …………………. |
| D : | மொத்தப் பரந்தனவான வருமானம் இலாபம், ஏனைய முற்றும் அடங்கிய வருமானத்தையும் உள்ளடக்குகிறது. | …………………. |

32) நிதிக்கூற்றுக்களின் மூலகங்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு மாற்று அளவீட்டு முறைகள் யாவை?

(1) .................................................... (2) ....................................................

(3) .................................................... (4) ....................................................

33) 2016 மார்ச் 1 இல் வணிகமொன்றின் சில்லறைக்காசு மீதி ரூபா 630 ஆகும். அத்தினத்தில் ரூபா 1370 காசு மீள்நிரப்பப்பட்டது. மார்ச் மாதத்தின் சில்லறைச் செலவுகள் வருமாறு.

| | ரூபா |
|---|---|
| போக்குவரத்துக்கட்டணம் | 400 |
| உபகரணச் செலவுகள் | 300 |
| அஞ்சற் செலவுகள் | 250 |
| எழுத்தாணி | 500 |
| பல்லினச் செலவுகள் | 300 |

ஏப்ரல் மாதத்தின் வசக்கட்டு நிதியினை ரூபா 100 அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அ) மார்ச் மாத முடிவில் மீள்நிரப்பவேண்டிய காசு எவ்வளவு?

....................................................................................................

ஆ) பிரதான காசாளர் வழங்கும் முற்பணத் தொகைக்குரிய இரட்டைப்பதிவு யாது?

....................................................................................................

34) வானதி நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களானவை அதிகரிக்குமா அல்லது குறைக்குமா அல்லது மாற்றமின்மையா என்பதனைக் குறிப்பிடுக.

| | **கொடுக்கல்வாங்கல்** | **அதிகரித்தல், குறைதல், மாற்றமின்மை** |
|---|---|---|
| A : | இரத்துச்செய்யப்பட்ட கொடுத்தகழிவு | ...................... |
| B : | மீளப்பெற்ற நட்டக்கடன் | ...................... |
| C : | கடன்பட்டோர் எதிரீடு | ...................... |
| D : | கடன்பட்டோர் விதித்த வட்டி | ...................... |

35) அருண் கம்பனியின் 30.06.2016இல் வங்கியால் அனுப்பப்பட்ட வங்கிக்கூற்றின் படியான வங்கிமீதி ரூபா 67500 எனக் காட்டியது. இது கம்பனியின் வங்கி மீதியுடன் இணங்கவில்லை. இம்மீதிகளை இணைக்கும் போது பின்வருவன பெற்றுக்கொள்ளப்பட்டது.

1) கடன்பட்டோர் ஒருவர் வங்கியில் ரூபா 75000 நேரடியாக வைப்புச்செய்தார்.
2) வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூபா 35000 காசேட்டின் வங்கிநிரலில் தவறான பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.
3) வங்கியில் வைப்புச்செய்யப்பட்ட காசோலை ரூபா 30000 மறுக்கப்பட்டிருந்தது.
4) இதுவரை வசூலிக்கப்படாத காசோலை ரூபா 60000, மாற்றப்படாத காசோலை ரூபா 20000.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) வங்கிக்கூற்றின்படி வங்கிமீதி 30.06.2016 இல் ரூபா ....................................

ஆ) காசேட்டின்படி ஆரம்ப வங்கிமீதி ரூபா ....................................

36) பின்வரும் ஒவ்வொரு உருப்படியும் நிதிக்கூற்றிலுள்ள எந்த மூலத்தில் இனங்காணப்படுகின்றது என்பதனைக் குறிப்பிடுக.

| **உருப்படிகள்** | | **மூலம்** |
|---|---|---|
| A : | சாதாரண பங்குமூலதனம் | …………………. |
| B : | முற்பண வாடகை | …………………. |
| C : | செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசு | …………………. |
| D : | உத்தரவாத ஏற்பாடு | …………………. |

37) அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு அவை எத்தகைய மாற்றங்கள் எனக் குறிப்பிடுக.

A) நிறுவனமானது தனது இறுதி இருப்பின் மதிப்பீடு முதல் வந்தது முதல் வெளியே போவது (FIFO) இற்கு பதிலாக நிறையளித்த சராசரி முறையினைப் பயன்படுத்துகின்றது. ………………………………………..

B) நிறுவனம் தனது பொறித்தொகுதிக்கு நேர்கோட்டு முறையில் இருந்து ஒருங்குபாக முறைக்கு மாற்றுகின்றது. ………………………………………..

C) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு மீள் மதிப்பீட்டு முறையிலிருந்து கிரய முறைக்கு மாற்றம் செய்தது. ………………………………………..

ஆ) பின்வரும் சந்தர்ப்பத்தில் மீறப்பட்டுள்ள கணக்கீட்டு எண்ணக்கரு எது எனக் குறிப்பிடுக. நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60000 பெறுமதியான பொருட்கள் நிறுவனத்தை வந்தடைந்தமையால் இக்கொள்வனவுக் கணக்கு ஏடுகளில் பதியாது விடப்பட்டது.

………………………………………………..

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி *38, 39, 40* வரையான வினாக்களுக்கு விடை தருக.**

அனு, தேனு, பானு பங்குடமையின் பங்காளர்கள். அவர்கள் தமது இலாபநட்டங்களை 3 : 2 : 1 எனப் பங்கீடு செய்கின்றனர். இப்பங்குடமையின் தகவல்கள் வருமாறு.

- பங்காளர் ஆரம்ப மூலதனத்திற்கு வட்டி 5% ஆகும்.
- 01.07.2015ல் பங்காளர்கள் மொத்த உரிமைகள் முறையே அனு ரூபா 340000, தேனு ரூபா 180000, பானு ரூபா 160000 ஆகும்.
- பங்காளர் மூலதன வட்டிகள் அனு ரூபா 15000, தேனு ரூபா 10000, பானு ரூபா 7500 ஆகும்.
- 30.06.2016 இல் இப்பங்குடமையின் தேறிய இலாபம் ரூபா 500000 ஆகும். எனினும் அனு பங்குடமையின் அபிவிருத்திக்காக தனது சொந்த நிதியிலிருந்து ரூபா 25000 விளம்பர செலவாக மேற்கொண்டிருந்தார். இது ஏடுகளிலிருந்து தவறவிடப்பட்டிருந்தது.
- பங்குடமையில் பானு 30.06.2016இல் இளைப்பாறுகின்றார். அத்தினத்தில் நன்மதிப்பு ரூபா 60000 ஆகும். இது மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கப்பட வேண்டும். அனு, தேனு இலாபநட்டங்களை 2 : 1 எனப் பகிர்ந்து தொடர்ந்து பங்குடமையினை நடாத்துகின்றனர்.
- பானுவிற்குச் செலுத்தப்படும் தொகை அனைத்தும் ஆண்டிற்கு 8% வட்டிக்குக் கடனாக விட்டுச் செல்கின்றார்.

38) 30.06.2016ல் பங்காளர் அனு, தேனு ஆகியோரது நடைமுறைக்கணக்கு மீதி யாது?

அனு ரூபா ..............................................................................................................................

தேனு ரூபா ..............................................................................................................................

39) நன்மதிப்பு தொடர்பான இரட்டைப் பதிவு யாது?

..............................................................................................................................

..............................................................................................................................

40) பானுவின் கடன்தொகை மீதி யாது?

..............................................................................................................................

41) வரையறுத்த குமார் பொதுக்கம்பனியின் 01.04.2015ல் காணப்பட்ட மீதிகள் வருமாறு.

| | |
|---|---|
| ரூபா 10 இலான சாதாரண பங்குகள் | ரூபா 30000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | ரூபா 80000 |
| நிறுத்திவைத்த இலாபம் | ரூபா 120000 |
| 01.07.2015ல் உரித்து வழங்கல் | ரூபா 100000 |

கம்பனி 31.03.2016ல் வைத்திருந்த ஒவ்வொரு 10ரூபா பங்கிற்கும் 5 : 2 என்ற அடிப்படையில் ஒதுக்கவழங்கல் மூலம் உரிமை அதிகரிக்கப்பட்டது.
ஒதுக்க வழங்கலின் போது இரட்டைப்பதிவு யாது?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

42) பின்வரும் தகவல்கள் 30.06.2016ல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையது.

- 01.07.2015ல் கடன்பட்டோர் ரூபா 60000. கடன்விற்பனை ரூபா 360000 ஆகவும் 30.06.2016ல் கடன்பட்டோர் ரூபா 40000 ஆகவும் காணப்பட்டது.
- இவ்வருடத்தில் ரூபா 850000 கிரயம் கொண்ட மோட்டார்வாகனம் ஒன்று ரூபா 90000 இலாபத்தில் விற்பனை செய்யப்பட்டது. விற்பனைசெய்த திகதியில் இச்சொத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 220000 ஆகும்.

LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி மேலே கூறப்பட்ட கொடுக்கல்வாங்கல் காரணமாக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலையும் (பெறுமதிகளுடன்) பொருத்தமான வகைப்படுத்தலுடன் தருக.

| | காசுப்பாய்ச்சல் | தொகை (ரூபா) | வகைப்படுத்தல் |
|---|---|---|---|
| A. | .............................. | .............................. | .............................. |
| B. | .............................. | .............................. | .............................. |

43) நிதிக்கணக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் நான்கு தருக.

(A) .................................................... (C) ....................................................

(B) .................................................... (D) ....................................................

44) பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் குறிப்பிடுக.

| நடவடிக்கைகள் | | ✓ / X |
|---|---|---|
| A : | நடைமுறைச் சொத்துக்கள் நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்றது. | ………… |
| B : | நிதிக்கூற்றுக்களின் மூலம் நிதிநிலமை, செயற்றிறன், உற்பத்தித் திறன், நிதிநிலமையில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. | ………… |
| C : | நிதிக்கூற்றுக்களின் மூலங்களில் கூறுகளாக சொத்துக்களும், காசுப்பாய்ச்சல்களும் அமைகின்றது. | ………… |
| D : | கணக்கீட்டில் ஒரு விடயமானது பொருண்மையுடையதாக இல்லாதிருப்பின் அதற்குக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்ற வேண்டியதில்லை. | ………… |

45) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தரரீதியான பண்புகளாகக் கருதப்படும் நான்கு விடயங்கள் யாவை?

(1) ……………………………………………………………………

(2) ……………………………………………………………………

(3) ……………………………………………………………………

(4) ……………………………………………………………………

46) சில்லறைக் காசாளர் தனது செலவுகளைப் பேரேட்டிற்கு மாற்றும் போது பின்பற்றப்படும் இரட்டைப்பதிவு முறை யாது?

……………………………………………………………………

……………………………………………………………………

47) சியல் நிறுவனத்தின் 31.03.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்றில் இருந்தான தகவல்கள் வருமாறு.

| | ரூபா (000) |
|---|---|
| வருமானவரி கழிப்பதற்கு முன்னரான இலாபம் | 7500 |
| வட்டி | 600 |

நிதிக்கூற்றிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

ரூபா (000)

| | **31.03.2015** | **31.03.2016** |
|---|---|---|
| இருப்பு | 4000 | 4800 |
| கடன்பட்டோர் | 3000 | 4600 |
| கடன்கொடுத்தோர் | 1200 | 800 |

செயற்பாட்டில் இருந்து உருவான காசு யாது?

……………………………………………………………………

❖ ***48, 49ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்க.***

30.06.2016ல் வரையறுத்த திபேந்தர்சிங் கம்பனியின் மீதிகள் வருமாறு.

| **விபரம்** | **ரூபா (000)** |
|---|---|
| சாதாரண பங்குகள் | 2000 |
| 10% தொகுதிக்கடன் | 500 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 100 |
| கடன்கொடுத்தோர் | 80 |
| இறுதிஇருப்பு | 65 |
| வருமதியாளர் | 160 |
| வருமதி வட்டி | 10 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 300 |

48) தொழிற்பாட்டு மூலதனம் யாது?

ரூபா ..........................................................................................................................

49) திரவச்சொத்து எனக் கருதப்படும் பெறுமதி யாது?

ரூபா ..........................................................................................................................

50) கூறப்பட்ட மூலதனம் (வெளிப்படுத்திய மூலதனம்) எனப்படுவது யாது?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

| தரம் :- 13 (2017) | கணக்கீடு – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-
- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01) (அ) வரையறுக்கப்பட்ட ஐங்கரன் பொதுக்கம்பனியின் 30.06.2016ல் கணக்குப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பரீட்சைமீதி வருமாறு.

| விபரம் | வரவு (ரூ.000) | செலவு (ரூ.000) |
|---|---|---|
| காணியும் கட்டடமும் (கிரயம்) | 60000 | |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | 40000 | |
| **01.07.2015 திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள்** | | |
| கட்டடம் | | 16000 |
| மோட்டார் வாகனம் | | 14000 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 30000 |
| 01.07.2015ல் நிறுத்திவைத்த இலாபம் | | 10000 |
| வருமதியாளர் | 20000 | |
| 01.07.2015ல் ஐயக்கடன் ஏற்பாடு | | 2400 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | | 12600 |
| விநியோகக் கிரயம் | 3000 | |
| நிர்வாகச் செலவு | 4500 | |
| 10% வங்கிக்கடன் (01.01.2016ல்) | | 15000 |
| விற்பனைக்கிரயம் | 60000 | |
| செலுத்திய பங்குலாபம் | 1500 | |
| விற்பனைகள் | | 96000 |
| 30.06.2016ல் இருப்பு | 2300 | |
| 10% முதலீடுகள் | 10000 | |
| 2015/2016 செலுத்திய வரி | 600 | |
| ஊழிய சேமலாபநிதியம் | 150 | |
| ஊழிய நம்பிக்கை நிதியம் | 60 | |
| காப்புறுதி | 40 | |
| ஏனைய வருமானம் | | 1500 |
| வங்கி | | 150 |
| ஏனைய சென்மதிகள் | | 4500 |
| | **202150** | **202150** |

சீராக்கம் செய்யப்படாத மேலதிக தகவல்கள் வருமாறு :

1. கம்பனியின் காணியும் கட்டடமும் 01.01.2016ல் மீள்மதிப்பிடப்பட்டது.

| விபரம் | கிரயம் (ரூபா) | மீள்மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| காணி | 20000000 | 30000000 |
| கட்டடம் | 40000000 | 25000000 |

2. நடைமுறையல்லாத சொத்துக்களுக்குப் பின்வருமாறு பெறுமானத்தேய்விடுதல் வேண்டும்.

கட்டடம் 5%

மோட்டார்வாகனம் 10%

கட்டடத்திற்கு மீள்மதிப்பீட்டிற்குப் பின்னரும் மீள்மதிப்பிடப்படும் பெறுமதியில் 5% பெறுமானத் தேய்விடப்படுதல் வேண்டும்.

3. நடப்பாண்டிற்கான வருமானவரி, வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தில் 20% ஆகும்.
4. 30.09.2016ல் ஆரம்பிக்கப்படவேண்டிய ரூபா 500000 விற்பனை உத்தரவாதத்திற்கு பெறப்பட்ட ரூபா 400000 முற்பணமானது விற்பனைக்கணக்கில் உள்ளடக்கப்பட்டது.
5. ரூபா 200000 கடன்விற்பனையானது ஏடுகளில் தவறவிடப்பட்டிருந்தது.
6. கம்பனியின் இயக்குநர் நடப்பாண்டிலிருந்து ரூபா 200000 விற்பனை உத்தரவாத செலவுகளுக்கு ஏற்பாடு செய்ய முடிவு செய்துள்ளது.
7. 30.06.2016ல் கையிருப்பின் தேறத்தக்க பெறுமதி ரூபா 2000 என மதிப்பிடப்பட்டிருந்தது.
8. கடன்பட்டோரில் ரூபா 500000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாட்டினை ரூபா 2000000 ஆகவும் சீராக்க முடிவுசெய்யப்பட்டது.
9. காப்புறுதிக் கணக்கானது 01.10.2015 பெற்றுக்கொள்ளப்பட்ட வருடாந்த பத்திரத் தொகையினை குறித்து நிற்கின்றது.
10. கம்பனி தனது முதலீடுகளை 01.01.2016 ல் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்துள்ளது.

**வேண்டப்படுவது :**

- பிரசுரிப்பதற்குப் பொருத்தமான முறையில் வரையறுத்த ஐங்கரன் பொதுக்கம்பனியின் 30.06.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றும் அடங்கிய வருமானக்கூற்று. (பொருத்தமான குறிப்புக்களுடன்)

[10 புள்ளிகள்]

(ஆ) வரையறுக்கப்பட்ட ‘கிருஷ்ணா’ பொதுக் கம்பனியின் 30.06.2015ல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு

| விபரம் | ரூபா (000) |
|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (200000 சா. பங்கு) | 4000 |
| பொது ஒதுக்கம் | 2000 |
| நிறுத்திவைத்த இலாபம் | 6000 |

30.06.2016ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வியாபார நடவடிக்கைகளும் கம்பனியின் தீர்மானங்களும் தரப்படுகின்றது.

1. கிருஷ்ணா பொதுக்கம்பனி 01.07.2016ல் பொதுப்பங்கு வழங்கலுக்கு 200000 (ரூபா 20 படி) சாதாரண பங்குகளுக்கு கொடைமுனைவு செய்யப்பட்டது. 25.09.2015ல் மொத்தமாக 250000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. 01.10.2015ல் விண்ணப்பங்களுக்கு விகிதாசாரப்படி ஒதுக்கப்பட்டு மேலதிக விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டது.
2. 01.01.2016ல் சாதாரணபங்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 2 வீதமாக இடைக்காலப் பங்குலாபம் செலுத்தப்பட்டது.
3. 01.01.2016ல் ரூபா 1500000 பெறுமதியான காணிகட்டடம் ரூபா 2000000 மீள்மதிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்களில் சேர்க்கப்பட தீர்மானிக்கப்பட்டது.
4. கம்பனி 01.04.2016ல் 4 சாதாரணபங்கு வைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொன்றும் ரூபா 20 விலையிலான ஒரு சாதாரண பங்கு வீதம் ஒதுக்கவழங்கல் பொது ஒதுக்கம் மூலம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது,
5. 30.06.2016ல் நிறைவேற்றப்பட்ட இயக்குநர் தீர்மானங்கள் வருமாறு,
   - பொது ஒதுக்கத்திற்கு ரூபா 600000 மாற்றுதல்.
   - கடன்தீர் திறன் பரிசோதனைக்கு அமைய சாதாரண பங்கு ஒவ்வொன்றுக்கும் (ஒதுக்க வழங்கல் தவிர) ரூபா 2 இறுதிப்பங்குலாபம் காசாக வழங்க முடிவுசெய்யப்பட்டது.
6. 30.06.2016ல் முடிவுற்ற வருடத்திற்கான இலாபம் (மீள்மதிப்பீட்டு இலாபம் நீங்கலாக) ரூபா 6500000 ஆகும்.

**வேண்டப்படுவது :**

i. 30.06.2016ல் முடிவுற்ற வருடத்திற்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று.

ii. நடவடிக்கைகளுக்கான நாட்குறிப்புப் பதிவுகள் (விளம்பல் அவசியமில்லை)

[10 புள்ளிகள்]

**02)** (அ) இலாபநட்டங்களைச் சமனாகப் பகிரும் சரத், நிமால் முதலீடுகள் தொடர்பாக தரகு ஆலோசனை சேவை வழங்கும் கண்ணியத் தொழில் முயற்சியில் ஈடுபடும் பங்காளர்கள். இப்பங்குடமையில் 01.07.2015ல் கோபி என்பவர் புதிய பங்காளராகச் சேர்க்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் திருத்தப்பட்ட புதிய பங்குடமை ஒப்பந்தம் வருமாறு.

- இலாபநட்டங்கள் சரத், நிமால், கோபி முறையே 2 : 2 : 1 ஆகும்.
- நன்மதிப்பு பங்காளர் மூலதனக் கணக்கினூடாக சீராக்கம் செய்யப்படும்.
- பங்காளர்கள் தமது வருட முடிவிலுள்ள மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 8% வட்டி பெறுவதறகு உரித்துடையவர்கள்.
- நிமால், கோபி ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூபா 30000 சம்பளம் பெற உரித்துடையவர்கள்.
- பங்காளர் வழங்கும் கடன்களுக்கு வருடாந்தம் 10% வட்டி பெற உரித்துடையவர்.

30.06.2016ல் பங்குடமையின் பரீட்சைமீதி வருமாறு

| விபரம் | வரவு (ரூ.000) | செலவு (ரூ.000) |
|---|---|---|
| தரகுச்சேவை வருமானம் | | 12500 |
| தரகு வழங்கல் செலவு | 4000 | |
| செயற்பாட்டுச் செலவு | 2400 | |
| கோபி கடன் (01.01.2016) | | 3000 |
| ஆதனம், பொறி, உபகரணம் கொண்டுசெல்லல் மீதி (30.06.2016) | 7500 | |
| நிமாலுக்கு வழங்கிய சம்பளம் | 3600 | |
| ஆதனம், பொறி, உபகரண பெறுமானத்தேய்வு | 2200 | |
| ஏனைய வருமானம் | | 100 |
| வங்கியில் உள்ள காசு | 420 | |
| **மூலதனம் (01.07.2015)** | | |
| சரத் | | 2000 |
| நிமல் | | 2000 |
| **நடைமுறைக்கணக்கு (01.07.2015)** | | |
| சரத் | | 250 |
| நிமல் | | 150 |
| கோபி கொண்டுவந்த காசு | | 120 |
| | **20120** | **20120** |

மேலதிக தகவல்கள் :

1. கோபி தமது கண்ணியத்தொழில் முயற்சியை விஸ்தரிப்பதற்கு ரூபா 50000 தமது பணத்திலிருந்து விளம்பரச் செலவுக்கு வழங்கினான். இத்தொகை மீளவழங்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளான்.

2. சரத் ஏனைய பங்காளரின் அனுமதியின்றி பங்குடமை வருமானத்தில் ரூபா 60000 ஐ வழங்கி இழப்பை ஏற்படுத்தியுள்ளார். இவை சீராக்கப்பட வேண்டும்.

3. கோபி பங்குடமையில் சேரும்போது நன்மதிப்பு ரூபா 6000000 என மதிப்பீடு செய்யப்பட்டது.

4. 01.01.2016ல் பங்குடமையானது நிறுவனம் ஒன்றில் ஊழியர்களுக்கு தரகுச் சேவையினை வழங்கி மாதாந்தம் ரூபா 100000 கட்டணத்தினை வழங்குவதற்கான உடன்படிக்கை யினைச் செய்தது. இதன் பொருட்டு ரூபா 900000 காசு வழங்கப்பட்டது. இது தரகுச்சேவை வருமானக்கணக்கில் உள்ளடக்கப்பட்டது.

5. இப்பங்குடமை தனது கொடுக்கல்வாங்கல்களை வங்கிக் கணக்கின் மூலமாகவும் மேற்கொள்ளுகின்றது. எனினும் பங்குடமையின் வங்கிக்கணக்கு மீதியும் வங்கிக்கூற்றின் படியான வங்கிமீதியும் பின்வரும் காரணங்களால் ஒத்திணங்கவில்லை.
   - பங்குடமையின் வாடிக்கையாளர் வங்கியில் நேரடியாக வைப்புச்செய்த தொகை ரூபா 450000 புத்தகங்களில் காட்டப்படவில்லை.
   - நிமால் தனது ஆயுட்காப்புறுதிக் கட்டணம் ரூபா 20000 பங்குடமையின் காசோலை மூலம் வரையப்பட்டது. இவை புத்தகங்களில் காட்டப்படவில்லை.
   - பங்குடமையின் தரகுச்சேவை விருத்திக்காக வழங்கிய ரூபா 150000 காசோலை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இச்செலவு சேர்க்கப்பட்டுள்ளது.
   - கோபியின் நண்பர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரகுச்சேவைக் கட்டணம் ரூபா 100000 வங்கிக்கு வைப்புச்செய்யப்பட்ட போதும் இன்னும் வசூல் செய்யப்பட வில்லை. எனினும் சேவை வருமானக்கணக்கில் உள்ளடக்கப்பட்டது.
6. கோபி பங்குடமையில் சேரும்போது தன்னிடமுள்ள மோட்டார் வாகனம் ரூபா 1880000 பெறுமதியில் கொண்டுவந்த போதும் இது ஏடுகளில் காட்டப்படவில்லை.
7. அனைத்து நடைமுறையல்லா சொத்துக்களும் பங்குடமை நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்விடுவது வழமையாகும்.

**வேண்டப்படுவது :**

i. 30.06.2016ல் உள்ளவாறான சீராக்கிய வங்கிமீதி மற்றும் இணக்கக் கூற்று.

ii. 30.06.2016ல் பங்குடமையின் (பகிர்வு உட்பட) வருமானக்கூற்று.

iii. 30.06.2016ல் பங்காளர் நடைமுறைக்கணக்கு

iv. 30.06.2016ல் பங்காளர் மூலதனக்கணக்கு.

[20 புள்ளிகள்]

**03)** வரையறுத்த தீபன் கம்பனியின் 31.03.2016ல் முடிவுற்ற வருடத்திற்கான வருமானக்கூற்றும் 31.03.2015, 31.03.2016ல் உள்ளபடியான நிதிநிலமைக்கூற்றும் வருமாறு.

31.03.2016ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று (ரூபா 000)

| | | |
|---|---|---|
| விற்பனை | | 12000 |
| (-) விற்பனைக்கிரயம் | | (7000) |
| மொத்த இலாபம் | | 5000 |
| (+) ஏனைய வருமானம் (முதலீட்டு வருமானம்) | | 350 |
| | | **5350** |
| செயற்பாட்டுச் செலவு | 1400 | |
| தேய்மானம் | 900 | |
| வாகனம் முடிவுசெய்தல் நட்டம் | 150 | |
| கடன் வட்டி | 200 | (2650) |
| **வரி கழிக்க முன் இலாபம்** | | **2700** |
| (-) வருமான வரி | | (700) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **2000** |

கம்பனியின் நிதிநிலைமைக் கூற்று (ரூபா 000)

| விபரம் | 31.03.2015 | | 31.03.2016 | |
|---|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்து** | | | | |
| பொறி உபகரணம் | 3000 | | 3800 | |
| தேய்மான ஏற்பாடு | (1200) | 1800 | (1800) | 2000 |
| மோட்டார் வாகனம் | 2000 | | 2500 | |
| தேய்மான ஏற்பாடு | (600) | 1400 | (500) | 2000 |
| நீண்டகால முதலீடுகள் | | 2000 | | 2500 |
| **நடைமுறைச் சொத்து** | | | | |
| கையிருப்பு | 400 | | 450 | |
| வருமதியாளர் | 400 | | 350 | |
| முற்பண செலவு | 50 | | 150 | |
| வங்கியிலுள்ள காசு | 950 | 1800 | 350 | 1300 |
| | | 7000 | | 7800 |
| **உரிமையாண்மை** | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | | 5000 | | 5500 |
| நிறுத்திவைத்த இலாபம் | | 400 | | 1500 |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | | | |
| தொகுதிக்கடன் | | 800 | | 400 |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | | |
| வியாபார சென்மதியாளர் | | 500 | | 150 |
| வரி ஏற்பாடு | | 250 | | 100 |
| சென்மதி வட்டி | | 50 | | 150 |
| | | 7000 | | 7800 |

மேலதிக தகவல்கள் :

i. இவ்வாண்டு காலத்தில் செலுத்தப்பட்ட பங்குலாபம் ரூபா 900000.

ii. இவ்வருடகாலத்தில் 1000000 கிரயமுடையதும் ரூபா 600000 என முன்கொண்டு செல்லப்பட்டதுமான மோட்டார்வாகனம் ரூபா 450000 விற்பனை செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது :**

i. 31.03.2016ம் ஆண்டிற்கான

1. செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசு
2. முதலீட்டு நடவடிக்கையிலான தேறிய காசு
3. நிதியீட்ட நடவடிக்கையிலான தேறிய காசு

[10 புள்ளிகள்]

ii. நேரில் முறையிலான செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசு

[5 புள்ளிகள்]

04) அ) கல்கி நிறுவனத்தின் 30.06.2016ல் முடிவடைந்த வருடத்தில் எடுக்கப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 62500 எனக் காட்டியது. ஆனால் தனிநபர் பட்டியல் மீது வேறுபட்ட மீதியை காட்டியது. வேறுபாட்டிற்குப் பின்வரும் தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

- பானுகாவிற்கு வழங்கிய கழிவு ரூபா 6500 ஏடுகளில் தவறவிடப்பட்டிருந்தது.
- கொள்வனவுப் பேரேட்டு எதிரீடு ரூபா 15000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
- விற்பனை நாளேடு ரூபா 12000 அதிகமாகக் காட்டப்பட்டது.
- கடன்பட்டோர் மீது விதித்த வட்டி ரூபா 2000 பட்டியல் மீதியில் காட்டப்படவில்லை.
- இரத்துச்செய்த கொடுத்தகழிவு ரூபா 750 ஏடுகளில் தவறவிடப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது :**

i. திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.

ii. திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

[7 புள்ளிகள்]

ஆ) அம்மா விளையாட்டுக்கழகத்தின் பொருளாளர் 30.06.2016ல் முடிவுற்ற வருடத்தில் தயார்செய்த வருமானக்கூற்று, நிதிநிலமைக்கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

வருமானக் கூற்று

| | | |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| சந்தா | 60000 | |
| ஆயுட்கால சந்தா | 20000 | |
| முதலீட்டு வருமானம் | 10000 | |
| ஏனைய வருமானம் | 25000 | 115000 |
| **செலவினங்கள்** | | |
| ஏனைய செலவுகள் | 54000 | |
| சந்தா பதிவழிப்பு | 4000 | (58000) |
| **செலவிலும் கூடிய வருமானம்** | | **57000** |

நிதிநிலமைக் கூற்று

| | ***30.06.2015*** | ***30.06.2016*** |
|---|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 80000 | 110000 |
| சந்தா வருமதி | 12000 | 18000 |
| காசுக்கணக்கு | 40000 | 80000 |
| | **132000** | **208000** |
| திரண்ட நிதி | 43000 | 100000 |
| ஆயுள்சந்தா | 15000 | 75000 |
| முற்பணசந்தா | 25000 | 15000 |
| சென்மதி செலவுகள் | 49000 | 18000 |
| | **132000** | **208000** |

மேலதிக தகவல்கள் :

- 30.06.2016ல் நடைமுறையல்லா சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 5000.

**வேண்டப்படுவது :**

**30.06.2016 இற்கான**

i. கொள்ளல் கொடுத்தல் கணக்கு.

ii. ஆயுள்சந்தா கணக்கு

iii. சந்தாக் கணக்கு

[8 புள்ளிகள்]

05) அ) ஜனவரி 31ல் குகன் நிறுவனத்தின் காசேட்டின்படியான வங்கிமீதி ரூபா 65000 என காட்டியது. ஆனால் இது வங்கிக்கூற்றின்படியான மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1. கொடுத்தகழிவு ரூபா 3000 காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலில் ரூபா 4500 எனப் பதியப்பட்டிருந்தது.
2. சம்பளத்திற்கு வரைந்துகொடுத்த J 350 இலக்கம் கொண்ட ரூபா 8500 காசோலை சமர்ப்பிக்கப்பட்டபோது மறுக்கப்பட்டது. இது காசேட்டில் இடம்பெற்றது. பின்னர் அக்காசோலைக்கு வங்கி பணம் செலுத்தியிருந்தது. இது காசேட்டில் காட்டப்படவில்லை.
3. வங்கிக்கூற்றில் தோன்றும் வங்கிக்கட்டணம் ரூபா 850 காசேட்டின் தவறான பக்கத்திற் பதியப்பட்டது.
4. கொள்வனவின்போது 10% கழிவு நீக்கி வரைந்து கொடுத்த காசோலை ரூபா 8100 காசேட்டில் முழுத்தொகைக்கும் பதியப்பட்டது.
5. இதுவரை வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 16000.
6. வங்கியானது உரிமையாளர் சேமிப்புக்கணக்கில் பதியப்படவேண்டிய ரூபா 6000 நடைமுறைக் கணக்கில் பதியப்பட்டது.
7. இதுவரை சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 8000 ஆகும்.

**வேண்டப்படுவது : ஜனவரி 31 இல்**

1. காசேட்டில் அவசியமான சீராக்கங்கள்.
2. 31.01.2016 இற்கான வங்கி இணக்கக் கூற்று.

[10 புள்ளிகள்]

ஆ) சந்திரன் தனது சில்லறைக்காசு கொடுப்பனவுகளை முற்பண முறையில் மேற்கொள்வது வழமை. இதற்காக வாராந்த முற்பணக் கொடுப்பனவு முறையினை மேற்கொள்கின்றார்.

ஜனவரி மாதம் 07ம் திகதி சில்லறைக்காசு மீதி ரூபா 450 காணப்பட்டது. அக்காலப்பகுதியில் அவரால் மேற்கொள்ளப்பட்ட செலவுப் பகுப்பாய்வு விபரம் வருமாறு.

| | |
|---|---|
| தபாற்செலவு | ரூபா 300 |
| போக்குவரத்து | ரூபா 580 |
| எழுதுகருவி | ரூபா 300 |
| நானாவிதம் | ரூபா 370 |
| பேரேடு | ரூபா 500 |

ஒவ்வொரு வார இறுதியிலும் செலவு ஈடுசெய்யப்படுகின்றது. ஜனவரி 08 இல் இருந்து செய்யப்பட்ட செலவுகள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 08 | உ.இல. 15 | பயணம் | ரூபா 400 |
| ஜனவரி 10 | உ.இல. 16 | பேனா பென்சில் | ரூபா 250 |
| ஜனவரி 12 | உ.இல. 17 | முத்திரை, கடிதவுறை | ரூபா 150 |
| ஜனவரி 13 | உ.இல. 18 | நந்தனுக்கு வழங்கியது | ரூபா 200 |
| ஜனவரி 14 | உ.இல. 19 | பூமரம் வாங்கியது | ரூபா 300 |
| ஜனவரி 15 | உ.இல. 20 | தேனீர், சிற்றுண்டி | ரூபா 450 |

**வேண்டப்படுவது :**

- ஜனவரி 08 இல் இருந்து இரண்டாம் வாரத்திற்கான வசக்கட்டு முறையிலான சில்லறைக் காசேட்டினைத் தயார்செய்க.

**06)** வரையறுத்த சில்வர் கம்பனியின் ஏட்டில் 01.04.2015ல் மோட்டார் வாகனத்தின் மீதி ரூபா 1000000 ஆகவும், அதன் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி ரூபா 750000 ஆகவும் இருந்தது. இவை 01.04.2013இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அத்திகதியில் அவற்றின் பயன்பாட்டுக் காலம் *10* வருடங்களாகும் எனவும் இழிவுப் பெறுமதி ரூபா 70000 எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது.

31.03.2016ல் முடிவடையும் வருடத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல் இடம்பெற்றது.

1. 01.01.2016ல் ரூபா 170000 கிரயம் கொண்டதும் ரூபா 20000 இழிவுப் பெறுமதியைக் கொண்டதுமான மோட்டார்வாகனம் ரூபா 120000 இற்கு விற்பனை செய்யப்பட்டது,
2. எஞ்சிய சகல அலுவலக உபகரணங்களினதும் பயன்தரு ஆயுட்காலம் 01.04.2015ல் இருந்து 06 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது.

**வேண்டப்படுவது :**

1. மோட்டார் வாகனத்தினை அகற்றுவதற்கான நாட்குறிப்பு பதிவுகள். [10 புள்ளிகள்]
2. 31.03.2016ல் முடிவடையும் வருடத்திற்கான,
   - i. மோட்டார்வாகனக் கணக்கு
   - ii. மோட்டார்வாகனப் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு
   - iii. மோட்டார்வாகனப் பெறுமானத்தேய்வுக் கணக்கு

[5 புள்ளிகள்]

**07)** அ) காண்டியன் நிறுவனத்தின் *30.06.2016*ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு:

உற்பத்தி 15000 அலகுகள்

விற்பனை 13000 அலகுகள்

01.07.2015ல் இருப்பு 3000 அலகுகள்

அலகு ஒன்றிற்கான நியமக்கிரயம் வருமாறு

நேர்மூலப்பொருள் ரூபா 7

நேர்கூலி ரூபா 15

மாறும் உற்பத்தி மேந்தலை ரூபா 7

எதிர்பார்க்கும் பொருட்களின் விற்பனைவிலை ரூபா 40

நிலையான உற்பத்தி மேந்தலை ரூபா 90000

**வேண்டப்படுவது :** 30.06.2016 இற்கான,

i. இருப்புக்களின் கிரயப் பெறுமதி யாது?

ii. தேறத்தக்க இருப்புக்களின் பெறுமதி யாது?

iii. வருமானக்கூற்றில் இருப்புக்கள் தொடர்பாகக் காட்டப்படும் இரட்டைப்பதிவு யாது?

[6 புள்ளிகள்]

ஆ) 30.06.2016ல் பரதன் நிறுவனத்தின் நிதிநிலமைக்கூற்று மீதிகள் வருமாறு:

| | (ரூபா 000) |
|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் (கிரயம்) | 20000 |
| (-) திரண்ட பெறுமானத்தேய்வு ஏற்பாடு | (2000) |
| | 18000 |
| இறுதி இருப்பு (கிரயம்) | 200 |
| வருமதியாளர் | 400 |
| அட்டுறு வருமதி | 400 |
| காசும் வங்கியும் | 5000 |
| | 24000 |

**வேண்டப்படுவது :**

i. மேற்தரப்படும் நிதிநிலமைக்கூற்றில் தொடர்புபடும் எண்ணக்கருக்கள் நான்கினை உதாரணம் மூலம் தருக.

ii. நீர் குறிப்பிடும் எண்ணக்கருக்களின் விசேட சிறப்பியல்புகளை அடையாளப்படுத்துக.

[9 புள்ளிகள்]